

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் வடக்கு பகுதி, தகவல் தொழில்நுட்ப அணியின் பகுதி ஒருங்கிணைப்பாளர் த.தரணிவேந்தன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### சைதாப்பேட்டை – தேனாம்பேட்டை உயர்மட்ட மேம்பால எஃகு உற்பத்தி கட்டமைப்புப் பணிகள்!

# குஜராத் மாநிலத்தில் அமைச்சர் எ.வ. வேலு நேரில் ஆய்வு!

## தரச் சோதனையில் சலுகை கிடையாது! அமைச்சர் பேட்டி!



சென்னை, செப்.24–

சென்னை தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, 3.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.621 கோடி மதிப்பீட்டில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்கப் பட்டு வருகிறது. பணியை விரைவில், தரமான முறையில் நிறைவு செய்யும் வகையில், முன்னோக்கிய கட்ட மைப்பு (Prefabricated) முறையில், சுமார் 15,000 டன் எஃகுக் கட்டமைப் புகள் (Pier, PierCap, Girder) உரு வாக்கப்பட்டு வருகின்றன. உற்பத்தி பணிகள் வதோதரா, ஹைதராபாத் உள்ளிட்ட நகரங்களில் உள்ள 5 தொழிற்சாலை களில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை தமிழ் நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலை கள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (23.09.2025) முன்னேற்றப் பணி களை நேரில் ஆய்வு செய்து, உற் பத்தி தரத்தையும், பணிகளை விரை வில் முடிக்கும் பொருட்டு, நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற் கொண்டார்.

குஜராத் மாநிலம், வதோதராவில் உள்ள கே.பி. கிரீன் தொழிற்சாலை யில் தயாரிக்கப்பட்டு வரும் முன்வா ர்க்கப்பட்ட எஃகு தூண்கள் (Pier), மேல்தாங்கிகள் (PierCap), உத்திரங் கள் (Girder) ஆகியவற்றின் உற்பத் தியையும், தரத்தினையும், சோத னைச் சான்றுகள் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளையும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

மேம்பாலப் பணிகள் திட்டமிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு செய்யப் படுவதை உறுதி செய்ய தினசரி கண் காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. உற்பத்தி முடிந்தவுடன் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, கட்டுமான பணி கள் வேகமாக மேற்கொள்ளப்படும். தரச்சோதனை மற்றும் பாதுகாப்பு நடைமுறை களில் எந்தவித சலுகை யும் செய்யப்படமாட்டாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**சர்வதேச தரத்திற்கு இணையானது!**

இந்த மேம்பாலப் பணிகள் நிறை வடைந்தவுடன், அண்ணாசாலைப் பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெரிசல் குறையும், தேனாம்பேட்டை – சைதாப்பேட்டை இடையேயான பயண நேரம் பெரிதும் குறையும், பய ணிகள் மற்றும் பொதுமக்களுக்கு வச திகள் ஏற்படும், இம்மேம்பாலம் சர்வ தேச தரத்திற்கு இணையான கட்டமைப்பு தரத்தில் அமையப் பெற்று, நீடித்த பயன்பாடு வழங்கும் என்றும் அமைச்சர் அவர்கள் எடுத்து ரைத்தார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சா லைத்துறை தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு. கோ.சத்தியபிரகாஷ், நெடுஞ்சாலைத் துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம் மற் றும் NKAB தொழிற்சாலையை சேர்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் - மகளிர் தொண்டரணி சார்பில் 70 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நலஉதவிகள்!

## கனிமொழி கருணாநிதி – ஹெலன் டேவிட்சன் – குமரி விஜயகுமார் வழங்கினர்!



சென்னை, செப்.24–

சென்னை கிழக்கு மாவட்ட திமுக மாவட்ட மகளிர், மகளிர் தொண்ட ரணி, எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் முன்னேற்றப் பாதையில் தி.மு.க. முப் பெரும் விழாவை முன்னிட்டு – 70 மகளிர் சுயஉதவிகுழுக்களுக்கு சுழல் நிதி ஒவ்வொரு குழுக்களுக்கும் தலா ரூ.10,000/மும், குழு உறுப்பினர் 700 பெண்களுக்கு புத்தாடைகளையும்– கழக துணைப்பொதுச் செயலாளர் திருமிகு.கனிமொழி கருணாநிதி எம். பி, கழக மகளிர் அணிச் செயலாளர் திருமதி.ஹெலன் டேவிட்சன், மாநில மகளிரணி இணைச்செயலாளர் திரு மதி.குமரி விஜயகுமார் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப் பித்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக மாவட்ட மகளிர், மகளிர் தொண்ட ரணி, எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் முன்னேற்றப் பாதையில் தி.மு.க. முப் பெரும் விழாவை முன்னிட்டு "முப் பெரும் தொடர் 03 பெண்ணிடம் செல் வம் பெருகும் ! பெருமையை வழங்கும் கழகம் ! எனும் தலைப்பில் மாபெரும் நலத்திட்டம் 23/09/25 செவ்வாய்க்கி ழமை அன்று மாலை 04.00 மணிய ளவில், சென்னை, எழும்பூர், சிராஜ் மகாலில் நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பா ளர் இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கோ. ஏகப்பன், வி.சுதாகர், சொ.வேலு எம். சி, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத் திராசன், புரசை ஜி.தாமோதரன், பா ஸ்ரீராமுலு, ஜீ.வி.நாகவள்ளி, எஸ். ஜான்ஸிராணி, யு. இலக்கியா, சரிதா மகேஷ், எல். சுந்தரராஜன், ஆர் கிருஷ்ணவேணி, சகினா பேகம், டாக் டர்.ஜி.சாந்தகுமாரி, பரிதி இளம் சுருதி, எஸ். விஜயலட்சுமி, சூர்யாரகு, எஸ் விஜயலட்சுமி, சுதா தீனதயாளன் எம் சி, பாத்திமா முசாபர்எம் சி, கே.எம். ஸ்நோபா, அமுல் பாண்டியன், சாவித் திரி ஸ்ரீ வீரராகவன், கே. அன்னபூ ரணி, ஜே.தேவகிருபை, ஜெயசூர்யா முன்னிலை வகித்தனர்.

ஏ.நிர்மலா தேவி, ஏ.சுகந்தி, வி. நதியா, ஜி.ஞான தீபம், புனிதா மோகன் வரவேற்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழா வில் 70 மகளிர் சுய உதவி குழுக்க ளுக்கு சுழல் நிதி ஒவ்வொரு குழுக்க ளுக்கும் தலா ரூ.10,000/மும், குழு உறுப்பினர் 700 பெண்களுக்கு புத்தா டைகளையும் – கழக துணைப்பொதுச் செயலாளர் திருமிகு.கனிமொழி கரு ணாநிதி எம்.பி, கழக மகளிர் அணிச் செயலாளர் திருமதி.ஹெலன் டேவிட் சன், மாநில மகளிரணி இணைச்செ யலாளர் திருமதி.குமரி விஜயகுமார் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தனர்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், கே.லட்சுமி பி.ஜெயந்தி, பி.ஜலபூசனம், எஸ்.லட் சுமி ஆர்.சாந்தி டி.தேன்மொழி எம். அன்னகிளி கே.சாந்திபில்லி மகேஸ் வரி ப.மலர்கொடி வி.வளர்மதி வளர் மதி வி.ஜெயசூர்யா ஏ.சாவித்திரி ஏ.சுசிலா ஆர்.அனிதா சி.ராதிகா ஜி.செல்வி கே.காயத்திரி கௌரிகுரு பரன் தனபாக்கியம் பிரீத்தி ஆர். கோமதி கே.ஜெயந்தி ஜே.சுகந்தி சி.அனிதா, பி.கலைவாணி என்.ராஜ கலா, டி.விமலா, ஆர்.பிரியா மகேஸ் வரி, சாந்தி மாசிலாமணி ஆர்.இருத யமேரி, எம்.கிருஷ்ணவேணி, கே. சித்ரா ஆர்.மணிமேகலை டி.தமிழ் செல்வி தரணிசீனிவாசன் எஸ்.அருள் செல்வி, ஈஸ்வரிகண்ணன் ஏ.சகிலா ஜெ.வரலட்சுமி, எஸ்.சந்திரகலா, அனு ஷியா பாண்டுரங்கன், பிரேமா தயா ளன், எஸ்.ரசூல் டி.வி.வேலு எம்.மலர் மாறன் எம்.தில்லைகுமார் பி.சி. சம்பத்குமார் ஜெ.கே.கருணாகரன் சூளை சுப்புராயலு ஆர்.பாபு வி.விஜ யகுமார் வான்மதி கதிரவன், வி. அபாய் தி.தயாளன் சு.மனோகர் ந.பாலு ஆம்.எம்.ரங்கநாதன் சி.சேகர் மற்றும் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த னர்.

இந்நலத்திட்ட விழாவில் இ.மொய் தீன், டால்பின் எஸ்.ஹரி நன்றி கூறி னார்கள்.



திருவள்ளூர் நகரம் வார்டு எண் 15 மற்றும் 16 பகுதிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பங்கேற்று பொதுமக்களிடத்திலிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து உரிய நடவடிக்கை எடுக்க அலுவலர்களிடத்தில் எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் நகராட்சி தலைவர் உதயமலர் பாண்டியன், வி.எஸ்.நேதாஜி, நகராட்சி பொன்.பாண்டியன், நகர துணைச் செயலாளர் எம். பரசுராமன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர் திலீபன், நகர்மன்ற உறுப்பினர்கள் டி. செல்வகுமார், இந்திரா பரசுராமன், என். சுரேஷ்குமார், வழக்கறிஞர் சரவணன், சித்திரை, ஆதி, கோபி, லோகநாதன், வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் - முப்பெரும் விழாவில் விருது பெற்ற

# கனிமொழி கருணாநிதி எம்.பி. - சோ.மா.ராமச்சந்திரன்

## விருதுக்காகப் பெற்ற தொகையினை கழக வளர்ச்சி நிதிக்கு வழங்கினர்!



சென்னை, செப். 24 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் தி.மு.க. முப்பெரும் விழாவில் 'பெரியார் விருது'க்காக பெற்ற தொகை யினை கனிமொழி கருணாநிதி, எம்.பி., 'கலைஞர் விருது'க்காக பெற்ற தொகையினை சோ.மா.ராமச் சந்திரன் கழக வளர்ச்சி நிதிக்கு வழங்கினர்.

கரூரில் 17.9.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் கழ கத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முப்பெரும் விழா விருதுகள் வழங்கினார்.

பெரியார் விருது பெற்ற துணைப் பொதுச்செயலா ளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., மற்றும் கலை ஞர் விருது பெற்ற கழக மூத்த முன்னோடி சோ.மா. ராமச்சந்திரன் ஆகியோர் விருதுக்காக, தங்களுக்கு கிடைத்த தொகையான தலா ரூபாய் மூன்று லட்சத் தினை கழக வளர்ச்சி நிதிக்கு வழங்குவதாக விழா மேடையிலேயே அறிவித்திதன் தொடர்ச்சியாக, நேற்று (23.09.2025) சென்னை, அண்ணா அறி வாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களிடம் தங்க ளுக்கு வழங்கப்பட்ட விருதுக்கான தொகையான தலா ரூபாய் மூன்று லட்சத்திற்கான காசோலை யினை கழக வளர்ச்சி நிதிக்கென வழங்கினார்கள்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, மதுரை மாவட்டத்துக்கு இன்று சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**24.09.2025 புதன்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை. |
| காலை 11:25 மணி | சோழ வந்தான் தொகுதிக்குட்பட்ட கிளை, வட்டச் செயலாளர்– பாக முகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் | அய்யன்கோட்டை, வாடிப்பட்டி. |
| மாலை 05:00 மணி | திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டி தொகுதிகளுக்கு உட்பட்ட கிளை, வட்டச் செயலாளர்– பாக முகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல். | முத்தப்பன்பட்டி சாலை, திருமங்கலம். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 23.09.2025

கலைஞர் 100 1924 - 2023





பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மகேஸ்வரி நகர் பகுதியில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து 10லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அங்காடி மையத்திற்கு இ.கருணாநிதி எம்எல்ஏ அடிக்கல் நாட்டி அருகில் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பூங்காவை ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார் அப்பொழுது பகுதி செயலாளர் ஏ.கே. கருணாகரன், மாமன்ற உறுப்பினர் சரண்யா மதுரை வீரன் வட்டச் செயலாளர் க.ரமேஷ், பகுதி அவைத்தலைவர் ஏ. வீரபத்திரன் பகுதி இளைஞ ரணி அமைப்பாளர் லோ.டில்லி பாபு நகர மாணவரணி துணை அமைப்பாளர் எம்.இளவரசன் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் இருந்தனர்.